வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2053/அ2/2023 நாள் 17.05.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – தற்காலிக பணியிடங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர் நீட்டிப்பு ஆணை பெற்று வரும் தற்காலிகப் பணியிடங்கள் தொடர்வதின் அவசியத்தை ஆராயக் குழு அமைக்கப்பட்டது – தற்காலிகப் பணியிடங்களை நிரந்தரமாக்குதல் (Permanent post) சார்பான விவரங்கள் உரிய படிவத்திலும் இணைப்பில் காணும் Google படிவத்திலும் பூர்த்தி செய்து அனுப்ப கோருதல் – தொடர்பாக |
| பார்வை | 1. அரசாணை (டி) எண் 271, நிதித்துறை ( CMPC) நாள் 18.08.2022<br>2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண் 18865/அ4/இ4/2023 நாள் 12.05.2023 |

பார்வை 2 ல் காணும் செயல்முறைகள் ஆணையின் படி, 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர் நீட்டிப்பு ஆணை பெற்று செயல்பட்டு வரும் தற்காலிகப் பணியிடங்கள் தொடர்வதின் அவசியத்தை ஆராயக் குழு அமைக்கப்பட்டுள்ளது அதனைத் தொடர்ந்து நிரந்தர / தற்காலிகப் பணியிடங்கள் குறித்து கீழ்க்காணும் படிவத்தில் கோரப்பட்ட விவரங்களை இணைப்பில் காணும் படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 2ல் காணும் கடித்தில் தெரிவித்துள்ள வரிசை எண் 1 முதல் 9 முடிய உள்ள விவரங்களின் அடிப்படையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் மருதம் (Font ) ல் தட்டச்சு செய்து இணைப்பில் காணும் Google படிவத்திலும் மற்றொரு நகல் இணைப்பில் உள்ளவாறு ( Hard copy) 18.05.2023 அன்று மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக **அ2 பிரிவில் ஒப்படைக்குமாறு** தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் தகவல் அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் இதில் தனிகவனம் செலுத்தி உரிய காலகெடுவிற்குள் விவரங்களை படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்புமாறு அனைத்து அலுவலர்கள் மற்றும் பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தொடக்க கல்வி சார்ந்து / மாவட்டக் கல்வி அலுவலகம் தொடக்க கல்வி / வட்டாரக் கல்வி அலுவலங்கள் விவரங்களை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் ( தொடக்க கல்வி ) தொகுத்து Google படிவத்திலும் மற்றொரு நகல் இணைப்பில் உள்ளவாறு ( Hard copy) 18.05.2023 மாலைக்குள் அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் தகவல் சார்ந்து பள்ளி / அலுவலகங்களில் இன்மை அறிக்கை எனில் உடன் இணைப்பில் காணும் படிவத்தில் இன்மை அறிக்கை என பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**

உரிய படிவம்

// ஒப்பம் //

// க.முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**

1. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி காட்பாடி
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்

(இடைநிலை / தொடக்க கல்வி / தனியார் பள்ளிகள்)

3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்
4. அனைத்து அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள்